கால்நடையை வளர்ப்பவர்கள், அந்த மருத்துவர் கொண்டு வருகிற ரிஜிஸ்டர் புத்தகத்திலே, மருத்துவர் வந்தார்; மருந்தை நான் வாங்கித் தந்தேன்; அவர் சிகிச்சை அளித்தார் என்று எழுதித் தரவேண்டும். இந்த திட்டத்தை தீவிரமாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு தமிழகத்தி னுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில் நாங்கள் பரிசீலித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 453, திரு. என். ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

453—

காட்டுமன்னார் கோவிலில் 'சென்ட்' தொழிற்சாலை நிறுவுதல்.

*14690—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப்பூ அதிகமாக விளைவதால் இங்கே 'சென்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் வேளாண்மைத் துறை யின் பதிலுரையிலே, கவிதைமழைக் கொட்டியதைப் போல, 'சென்ட்' உபயோகிக்கும் காதலர்களிடையே கவிதை அருவி கொட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. மேலை நாடுகளில், மகளிர் மணம்வீசும் மலர்களைச் சூடுவதில்லை. மாறாக, 'சென்ட்' அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 23]

இங்கே நாம் 'சென்ட்' தயாரிப்பதற்குத் தேவையான மணம் வீசும் மலர்கள், எங்கள் காட்டுமன்னார்கோயிலிலே அதிகமாக விளைகிறது. எனவே, அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்கும் பொருட்டு, அவை வெளிநாடுகளுக்கு விற்பதால், வருவாய் அரசுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால், மறு பரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பகுதியிலே ஆண்டு முழுவதும் கிடைக்கக்கூடிய மல்லிகைப் பூக்கள் அங்கே பயிர் செய்யப்படவில்லை என்பது மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலே அந்த மல்லிகைகளில் தயாராகக்கூடிய 'சென்ட்' தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இயற்கையாக கிடைக்கக்கூடிய மல்லிகைப் பூவிலிருந்து கிடைக்கக்கூடிய வாசனை திரவியத்தைவிட, செயற்கை முறையிலே மிகக் குறைந்த விலையிலே இன்றைக்கு அயல்நாடுகளிலே வாசனை எண்ணெய் உற்பத்தி செய்கிறார்கள். எனவேதான், அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் லாபகரமாகச் செயல்படவில்லை என்று சொன்னேன்.

__திரு. என். ஆர். ராஜேந்திரன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசியல் மேடைகளில்கூட மலர்மாலைகள் போடுவதற்குப் பதிலாக, சால்வைகள், துண்டுகள் அணிவிக்கிறார்கள். எங்கள் ஊரிலேயிருந்து அதிகமான மலர்களை தமிழகம் முழுவதும் அனுப்பி வைக்கிறார்கள். அவை விற்பனை ஆகாத சூழ்நிலையிலே, உற்பத்தியைக் குறைத்திருக்கிறார்களேயொழிய, மலர்கள் அங்கே அதிகமாக விளைவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இன்னும் அந்த மலர் உபயோகப்படுத்தப்படும் என்று அறிந்தால், அதிகமான முறையிலே விளைச்சல் அங்கே செய்ய வாய்ப்பிருக்கிறது. அதனால், இது மீண்டும் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோயில் பகுதியில் நிறைய ஆலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களுக்கெல்லாம் இன்றுகூட, மல்லிகைப்பூ மற்ற பூக்களைக் கொண்டுதான் அர்ச்சனை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள், பூ பயிரிடக்கூடியவர்கள் அதிக வருமானம் பெறவேண்டுமென்ற நல்ல நோக்கம் உடையவராய் இருப்பார் என்று நான் கருதுகிறேன். எனவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய 'கட்-ரோஸ்' போன்றவைகளை அந்த விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையிலே அவர்கள் பயிரிட முன்

வருவதற்கு, வேளாண்மைத் துறை அனைத்து ஆலோசனைகளை வழங்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மல்லிகைப்பூ விளைகின்ற ஊர்க்காரர்கள் எல்லாம் கையைத் தூக்கிக் கொண்டிருந்தால், இந்தக் கேள்வியில் துணைக் கேள்வி வராது. காட்டுமன்னார்கோயில் பகுதியில் செண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றிய கேள்வி இது.

வினா எண் 454, திரு. தி. சாத்தையா, இருக்கையில் இல்லை. திரு. வே. கோபாலகிருஷ்ணன் கேட்கிறார். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

454—

ஆதிதிராவிடர்களுக்காக உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமித்தல்.

*10857—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாவட்ட நலத் துறை அலுவலகங்களில் ஆதிதிராவிடருக்குரிய சதவீதத்தை நிரப்புவதற்கு உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு அலுவலகம் நியமிக்கும் செயல் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகத்தில் அம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் 18 சதவீதம்